

அரியலூர் மாவட்டம் குன்னம் தொகுதி செந்துறை ஒன்றியத்தில் “தேர்வை வெல்வோம்” என்ற வினா விடை புத்தகத்தை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தமது சொந்த செலவில் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியர் ஜா.ஆனி மேரி ஸ்வர்னா, கழக கொள்கை பரப்பு துணை செயலாளர் ச.அ.பெருநற்கிள்ளி, ஒன்றிய செயலாளர்கள் பூ.செல்வராஜ், வி.எழில்மாறன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன் மற்றும் மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் பலரும் கலந்துகொண்டனர்.



நாமக்கல் மேற்கு மாவட்டம் திருச்செங்கோடு ஒன்றியம் பா.ஜ.க. வடக்கு ஒன்றிய இளைஞரணி தலைவர் சதீஷ் தலைமையில் பா.ஜ.க.வைச் சேர்ந்த இளைஞர் அணியினர் ரேவந்த், பிரசாந்த், சசி, ஆனந்த், மைத்ரேயன், மனோஜ், வடிவேல், சதீஷ் ஜீவா சதீஷ்குமார், அசோகன் கார்த்தி, ஹரிஷ், சக்தி, மதன் உள்ளிட்ட 50க்கும் மேற்பட்டோர் நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் முன்னிலையில் திருச்செங்கோடு ஒன்றிய தி.மு.க. செயலாளர் வட்டூர் ஜி.தங்கவேல் ஏற்பாட்டில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தனர்.

### புதுக்கோட்டை மாவட்டம்

# வெள்ளலாப்பட்டி - இடையம்பாறை கிராமங்களில் புதிய மின்மாற்றிகள்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி துவக்கி வைத்தார்!

புதுக்கோட்டை,பிப். 15-

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியம், ஒலியமங்கலம் ஊராட்சி, வெள்ளலாப்பட்டி மற்றும் அரசமலை ஊராட்சி, இடையம்பாறை கிராமங்களில், புதிதாக அமைக்கப்பட்டுள்ள மின்மாற்றிகளை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி 08.02.2024 அன்று துவக்கி வைத்தார்.

பின்னர் அமைச்சர் எஸ். ரகுபதி தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய பொதுமக்களும் நலவாழ்வு வாழ வேண்டும் என்ற அடிப்படையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் மின்விநியோகம் சீராக தேவைப்படும் இடங்களில் புதிய மின் மாற்றிகள் அமைக்கப்பட்டு மின்விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது. அந்தவகையில், பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியம், வெள்ளலாப்பட்டி மற்றும் இடையம்பாறை கிராமங்களில் புதிய மின் மாற்றிகள் துவக்கி வைக்கப்பட்டது. அதன்படி, பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியம், ஒலியமங்கலம் ஊராட்சி, வெள்ளலாப்பட்டி கிராமத்தில், குறைவான மின் அழுத்தத்தை சரி செய்யும் வகையில், ரூ.4,26,620 செலவில் 63KVA/11KV புதிய மின் மாற்றி துவக்கி வைப்பதன் மூலம் இப்பகுதியில் உள்ள 80 வீட்டு மின் இணைப்புகள், 1 OHT மின் இணைப்பு, 3 விவசாய மின் இணைப்புகளுக்கு நிறைவான மின் அழுத்தம் வழங்கப்படும்.

மேலும் அரசமலை ஊராட்சி, இடையம் பாறை கிராமத்தில், குறைவான மின் அழுத்தத்தை சரி செய்யும் (5.6,71,940 63KVA/11KV) புதிய மின் மாற்றி துவக்கி வைப்பதன் மூலம் இப்பகுதியில் உள்ள 70 வீட்டு மின் இணைப்புகள், 10 வணிக மின் இணைப்புகள், 2 OHT மின் இணைப்பு, 5 விவசாய மின் இணைப்புகளுக்கு நிறைவான மின் அழுத்தம் வழங்கப்படும்.

எனவே பொதுமக்களின் நலன் கருதி தமிழக அரசால் செயல்படுத்தப்படும் இதுபோன்ற நலத்திட்டங்களை உரிய முறையில் பயன்படுத்தி தங்களது வாழ்வாதாரத்தினை மேம்படுத்திக்கொள்ள வேண்டும் அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், மின்சார வாரிய செயற்பொறியாளர் எம்.ஆனந்தாய், உதவி செயற்பொறியாளர் இரா.முத்துச்சாமி, உதவிப் பொறியாளர் எஸ். சிங்காரக்கண்ணன், பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் அ.முத்து, வட்டாட்சியர் எம்.சாந்தா, ஊராட்சிமன்றத் தலைவர் முருகேசன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

### மயிலாடுதுறை மாவட்டம் திருக்கடையூர் பள்ளியில்

# 300 மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள்!

## நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. வழங்கினார்!

மயிலாடுதுறை, பிப்.15-

மயிலாடுதுறை மாவட்டம், செம்பனார்கோயில் மத்திய ஒன்றியம், திருக்கடையூர் அரசு மேல் நிலைப் பள்ளியில் திருக்கடையூர், ஆக்கூர் அரசு மேல் நிலைப் பள்ளி மற்றும் ஆக்கூர் ஓரியன்டல் அரபி மேல்நிலைப்பள்ளி, ஆகிய பள்ளி மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதி வண்டி வழங்கும் விழா நடைபெற்றது.

விழாவில் 300 மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதி வண்டிகளை மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம். முருகன் வழங்கி சிறப்புரையாற்றினார்.

விழாவில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஜி.என்.ரவி, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் விஜயகுமார், எம்.அப்துல்மாலிக், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம். ஸ்ரீதர், தரங்கம்பாடி பேரூர் கழகச் செயலாளர் முத்துராஜா, செம்பனார்கோயில் ஒன்றியக் குழு துணைத்தலைவர் பி.பாஸ்கர், தரங்கம்பாடி பேரூராட்சி தலைவர் சுகுணா சுந்தரி குமரவேல், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் துளசிரோகாரமேஷ், ஒன்றியக் குழு உறுப்பினர் சாந்தி, திருக்கடையூர் ஊரட்சிமன்ற தலைவர் ஜெயமாலதிசிவராஜ், ஆக்கூர் ஊராட்சி மன்ற தலைவர் சந்திரமேகான், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் இரா.செந்தில், ஊராட்சிமன்ற தலைவர்கள் ஒன்றியக் குழு உறுப்பினர் சாந்திவேல்முருகன், ஊராட்சிமன்ற துணைத்தலைவர்கள் அசோக்குமர், சிங்காரவேல்,

ஒன்றிய, கிளைக் கழக நிர்வாகிகள் ஈச்சங்குடி இளங்கோவன், ஓரியன்டல் பள்ளி தாளாளர் இப்ராகிம்ரசூல், தலைமை ஆசிரியர்கள் சாஜகான், திருஞானசம்பந்தம், மாவட்ட பிரதிநிதி ஜெ.பி. ராஜா கழக நிர்வாகிகள், ராமலிங்கம், ஜெயச்சந்திரன், சாமிநாதன், செந்தில், திருமூர்த்தி, மாரியப்பன்,கந்தசாமி, சடகோபன், ரகு, வெங்கடேஷ், பாஸ்கர், சந்தோஷ், முருகன், இளங்கோவன், கோபுராஜ், ராமகிருஷ்னன், செல்வம், தினேஷ் மற்றும் கிளை கழக நிர்வாகிகள், ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், ஆசிரியர்கள், பள்ளி மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு கழக இளைஞர் அணி செயலாளர் – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களது அறிவுறுத்தலின் பேரில் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் விராலிமலை தொகுதிக்கான கலைஞர் நூற்றாண்டு நூலகம் விராலிமலை ஏ.பி.ஆர் கட்டிடத்தில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சு. சண்முகம் வரவேற்புரையில் மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் இளையராஜா தலைமையில் மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன் ரிப்பன் வெட்டி நூலகத்தினை மக்கள் பயன்பாட்டுக்கு அர்ப்பணித்தார்கள். நிகழ்வில் கழக இலக்கிய அணி துணைத் தலைவர் கவிச்சுடர் கவிதைப்பித்தன் முன்னிலையில் நூலகத்தினை அர்ப்பணித்து நடைபெற்ற நிகழ்வில் ஒன்றிய கழக செயலாளர்கள் அ.இளங்குமரன், மு.பி.ம.சத்தியசீலன், கே.பி.ஐயப்பன், ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து, பொதுக்குழு உறுப்பினர் தென்னலூர் எம்.பழனியப்பன், எம்.எம்.பாலு, எஸ்.வி.ஆர்.ஸ்டாலின், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் மு.கலைஞர் கருணாநிதி, மு.இளஞ்சேரன், ப.சிவக்குமார், நா.ஸ்டாலின், நூ.அன்சாரி பாஷித், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி தலைவர் ஏ.பி.ஆர். ராஜாங்கம், கே.ஜி.எஸ்.சுகுமாரன், ஒன்றிய இளைஞர் அணி நிர்வாகிகள் சிவக்குமார், பாலசுப்ரமணியன், செ.கணேஷ், வசந்த், கோபி, அழகர்சாமி, சந்தோஷ் குமார், ஞானவேல், ஹெரால்டு நிக்கேஷ், ராஜா ஸ்டாலின் மற்றும் ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### சேலம் மாவட்டத்தில் 100 ஏரிகளுக்கு நீரேற்றி திட்டம் மூலம் நீர் நிரப்ப துரித நடவடிக்கை எடுக்கப்படும்!

# சேதமடைந்த ஏரிகள், மதகுகள் நிதி ஒதுக்கப்பட்டு விரைவில் பழுது பார்க்கப்படும்!

## சட்டப்பேரவையில் - நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அறிவிப்பு!

சென்னை, பிப். 15-

சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் கேள்வி நேரத்தின் போது பதிலளித்த நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள், “தமிழ்நாட்டில் பழுதடைந்த ஏரிகளும், மதகுகளும் நிதி ஒதுக்கப்பட்டு பழுது பார்க்கப்படும்!” என்று அறிவித்தார்.



சட்டப்பேரவையில், நேற்று முன்தினம் கேள்வி நேரத்தின் போது, இது குறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**கே.ஏ. செங்கோட்டையன்:** அத்திக்கடவு - அவினாசி திட்டம், சோதனை ஓட்டத்தின்போது, சில ஏரிகளுக்கும், குளங்களுக்கும் தண்ணீர் வரவில்லை என்ற அச்சம் மக்களிடத்தில் இருக்கிறது. அதை உடனடியாக அரசு பரிசீலிக்குமா என்பதையும், அதேநேரத்தில் விடுபட்டிருக்கின்ற ஏரிகள், குளங்களையும் சேர்ப்பதற்கு இந்த ஆண்டு முயற்சிகள் மேற்கொள்ளுமா?

**அமைச்சர் துரைமுருகன்:** இதனுடைய பணிகள் பெரும்பாலும் முடிந்துவிட்டன. சிலநேரங்களில் பைப்புகள் பதிக்கின்ற இடத்தில், அந்த நிலச்சுவான்தாரர்களுக்கு தர வேண்டிய பணம், பாக்கியிருக்கின்ற காரணத்தால், அதனைக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. விரைவில் இதன் துவக்கவிழா நடத்தப்படும்.

**க. சுந்தர்:** நம்முடைய திராவிட மாடல் ஆட்சியிலே நீர்வளத் துறையிலே பல்வேறு திட்டங்கள் புதியதாகக் கொண்டுவரப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. அதிலே ஏற்கெனவே காஞ்சிபுரம் செங்கல்பட்டு மாவட்டம், ஏரிகள் நிறைந்த மாவட்டம் என்று சொல்வார்கள். அந்த மாவட்டங்களிலுள்ள ஏரிகள், மதகுகள் பழுதடைந்திருக்கின்றன. எனவே, அதற்காக அமைச்சர் அவர்கள் நிதியை ஒதுக்கி, அவற்றைச் சீரமைத்திட முன்வருவார்களா?

**அமைச்சர் துரைமுருகன்:** உறுப்பினர் அவர்கள் சொன்னது உண்மைதான். பல ஆண்டுகாலமாக, அவை செப்பனிடப்படாத காரணத்தால், மதகுகள் எல்லாம் இடிந்திருக்கின்றன. இந்த ஆண்டு அப்படிப்பட்ட ஏரிகளை செப்பனிடுவதற்கு கணக்கெடுத்திருக்கிறோம். விரைவில் அதற்கான நிதி ஒதுக்கப்பட்டு, பழுதுபார்க்கப் படும்.

**ஓ.எஸ்.மணியன்:** நாகப்பட்டினம் மாவட்டத்திலும், திருவாரூர் மாவட்டத்திலும் தாளடிப் பயிர்கள் கிட்டத்தட்ட 1,51,000 ஏக்கர் மார்ச் மாதத்தில்தான் அறுவடைக்கு வரும். எனவே, பிப்ரவரி மாதம் முழுக்க அந்தப் பயிர்களுக்குத் தண்ணீர் தேவைப்படுகிறது. இரண்டு டி.எம்.சி. தண்ணீர் மட்டுமே திறந்து விடப்பட்டுள்ளது. விவசாயிகள், விவசாய சங்கங்கள் எல்லோருமே மேலும் 8 டி.எம்.சி. தண்ணீர் வேண்டுமென்று வேண்டுகிறார்கள். தயவு செய்து, நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள், இதனைத் திறந்துவிடுவார்களா?

**ஓ.எஸ். மணியன்:** என்னைவிட, காவேரிப் பிரச்சினை, நீர்ப் பிரச்சினை தெரியும். காரணம், அவர் அங்கே வாழ்பவர், வாழ்ந்து வருபவர். இப்போது இருக்கிற நீர் குடிநீருக்கு மட்டும் தான் இருக்கிறது. அதுவும் போய்விட்டால் பாதிக்கின்ற நிலைமை ஏற்படும். இருந்தாலும் 3 டி.எம்.சி. அளவு தண்ணீர் திறந்து விட்டிருக்கிறோம். அவர்கள் அப்போதைக்கப்போது பயிரிட்டுக் கொண்டே இருந்தால், தண்ணீர் விட்டுக்கொண்டே இருக்க முடியாது. ஆகவே, விரைவில் மழை வரும் என்று எதிர்பார்க்கலாம்.

**மு.பெ. கிரி:** செங்கம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சாத்தனூர் அணையின் மேற்புற கால்வாய் அமைத்து, சாத்தனூர் ஏரிக்கும், குப்பநத்தம் அணையை தலைவர் கலைஞர் அவர்கள் அவர்களிடத்தில் அனுமதியைப் பெற்று கட்டித்தந்த அமைச்சர் அவர்கள், குப்பநத்தம் அணையிலிருந்து மேற்புற கால்வாய் அமைத்து, குப்பநத்தம் ஏரிக்கும் தண்ணீர் தருவதற்கு புதிய கால்வாய் அமைத்துத் தருவாரா?

**அமைச்சர் துரைமுருகன்:** விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

**எடப்பாடி கே.பழனிசாமி:** சேலம் மாவட்டத்தில் நான்கு சட்டமன்றத் தொகுதி ஓமலூர், மேட்டூர், எடப்பாடி, சங்கரி. இந்த நான்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வறண்ட 100 ஏரிகளுக்கு நீரேற்றி மூலமாக நீர் நிரப்புகிற திட்டத்தை அம்மா அவர்களுடைய அரசு துவங்கியது. ஆனால் இப்போது அந்தப் பணி சுணக்கமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நீர்வளத் துறை அமைச்சர் அவர்களே நேரில் பார்வையிட்டுச் சென்று இருக்கின்றார்கள். அது வேகமாக, துரிதமாக நிறைவேற்ற இந்த அரசு முன்வருமா?

**அமைச்சர் துரைமுருகன்:** வேகமாக, துரிதமாக இந்த அரசு நடவடிக்கை எடுக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

# நிலத்தடி நீர் - நீர்நிலை மேம்பாடு உள்ளிட்ட வளர்ச்சிப் பணிகளுக்கு காலநீட்டிப்பு செய்யப்பட்டுள்ளதா?

## மாநிலங்களவையில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கேள்வி!

நாமக்கல், பிப். 14 -

ஒன்றிய அரசு நிலத்தடி நீர் மற்றும் நீர்நிலை மேம்பாடு உள்ளிட்ட வளர்ச்சிப் பணிகளுக்கு காலநீட்டிப்பு செய்யப்படுள்ளதா? என நாமக்கல் மாவட்டச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், எம்.பி கேள்வி எழுப்பியுள்ளார்.



நாடாளுமன்ற கூட்டத்தொடர் தற்போது நடைபெற்று வரும் நிலையில், நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர். என்.இராஜேஸ்குமார், எம்.பி, ஒன்றிய நீர்வளத் துறை அமைச்சகம், நதி மேம்பாடு மற்றும் கங்கா புத்துயிர் துறை சார்பில் பிரதான் மந்திரி க்ரிஷி சிஞ்சாயீ யோஜனா திட்டத்தின் கீழ் பாசனம், நீர் வழங்கல், நிலத்தடி நீர் மற்றும் நீர் நிலை மேம்பாடு உள்ளிட்ட உள்ளிட்ட வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கு காலநீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளதா, மாநில வாரியாக நடப்பு ஆண்டு உட்பட கடந்த மூன்று ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை மற்றும் வளர்ச்சிப் பணிகளுக்கான திட்டச் செலவு மற்றும் நிதியுதவி ஆகியவை குறித்து விளக்கம் அளிக்க வேண்டுகிறேன்.

இதற்கு பதிலளித்து பேசிய ஜல் சக்தி ஒன்றிய நீர்வளத்துறை அமைச்சர் ஸ்ரீகஜேந்திர சிங் ஷெகாவத், 201516 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட பிரதான் மந்திரி க்ரிஷி சிஞ்சாயீ யோஜனா திட்டத்தின் மூலம் பண்ணையில் தண்ணீர் வசதியை மேம்படுத்தவும், உறுதி செய்யப்பட்ட பாசனத்தின் கீழ் சாகுபடிப் பரப்பை விரிவுபடுத்தவும், பண்ணையில் நீர் பயன்பாட்டுத் திறனை மேம்படுத்தவும், நிலையான நீர் பாதுகாப்பு நடைமுறைகளை அறிமுகப்படுத்தவும் பணிகள் நடைபெற்றுள்ளன.

இதன் மூலம் துரிதப்படுத்தப்பட்ட நீர்ப்பாசன நன்மை திட்டம், நீர் மேலாண்மை, மேற்பரப்பு சிறு நீர்ப்பாசனம், நீர்நிலைகளின் பழுது, புதுப்பித்தல் மற்றும் மறு சீரமைப்பு, நிலத்தடி நீர் மேம்பாடு உள்ளிட்ட பணிகளுடன், கூடுதலாக, நிலவளத் துறையால் நீர்நிலை மேம்பாட்டு பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், விவசாயம் மற்றும் விவசாயிகள் நலத் துறை மூலம் க்ரிஷி விகாஷ் யோஜ்னா போன்ற திட்டங்கள் இணைக்கப்பட்டு, அதற்கான முன்னேற்றம் காணப்பட்டு வருகிறது என்றார்.

# தருமபுரி கிழக்கு - மேற்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

## தடங்கம் பெ.சுப்ரமணி - பி.பழனியப்பன் அறிவிப்பு !

தருமபுரி, பிப். 15-

தருமபுரி மாவட்டக் கழகச் செயலாளர் தடங்கம் பெ.சுப்பிரமணி, பி.பழனியப்பன் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆலோசனைப்படி தருமபுரி கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டக் கழக செயற்குழு கூட்டம் இன்று (15.02.2024 - வியாழக்கிழமை) மாலை 4.00 மணி அளவில் தருமபுரி மாவட்ட கழக அலுவலகம் கலைஞர் அறிவாலயம் தளபதி அரங்கத்தில் மாவட்ட அவைத்தலைவர்கள் சி.செல்வராஜ் மற்றும் மனோகரன் ஆகியோர் தலைமையில் நடைபெற உள்ளது. அது சமயம் இந்நாள்,முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், கிளை கழக நிர்வாகிகள், அணிகளின் தலைவர்கள், துணை தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேம்.





(குறிப்பு : சார்பு அணிகளின் தலைவர்கள், துணை தலைவர்கள், அமைப்பாளர்கள். துணை அமைப்பாளர்கள் தவறாமல் கலந்துகொள்ள வேண்டும்)

பொருள் : 1. நாடாளுமன்றத் தேர்தல் 2024 உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல் மாபெரும் பொதுக்கூட்டம் குறித்து.

2. கழக ஆக்கப்பணிகள் குறித்து.

இவ்வாறு அவர்கள் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளனர்.